සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
Provincial Department of Education - NWP
වැඩමෙල් මාකාණක් කල්වித් திணைக்களம்

48 | T | I

පළමු වාර පරීක්ෂණය - 11 ශ්‍රේණිය - 2018
First Term Test - Grade 11 - 2018
முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 11 - 2018

சுட்டிலக்கம் ..... **தமிழ் இலக்கிய நயம் I** **நேரம் : 3 மணித்தியாலம்**

- **பகுதி I இல் 1, 2 ஆகிய இரண்டு வினாக்களுக்கும் பகுதி II இலுள்ள 3 ஆம் வினாவிற்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

பகுதி I

01. (i). தொடக்கம் (v) வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i). "அலகு வாள் விழி ஆயிழை நல் நுதல்..."
அ. இங்கு கையாளப்பட்டுள்ள அணி யாது ?
ஆ. அதனை சுருக்கமாக விளக்குக ?

(ii). "அன்ன காலையில் ஆண் தகை ஆளியும்
பொன்னின் நல் நகர் வீதியிற் புக்கனன்"
அ. இப்பாடலடியினை சந்தி பிரித்து எழுதுக ?
ஆ. "ஆண் தகை ஆளி" என்ற பாடலடியின் சிறப்பு யாது ?

(iii). "தனித்தமைந்த வீட்டில் புத்தகமும் நானும்
சையோகம் புரிந்தொரு வேளை தன்னில்"
அ. இக் கவிதையின் ஆசிரியர் யார் ?
ஆ. "சையோகம்" என்பதன் பொருள் யாது ?

(iv). "பார்த்தாயா உன் மகனை உன்னைப் போலவே பிறந்திருக்கின்றான்"
அ. இக்கூற்று யாரால் - யாருக்கு கூறப்பட்டது ?
ஆ. இச் சிறுகதையின் ஆசிரியர் யார் ?

(v). "மரம் என்பது உயர்திணை" என்ற பத்தி எழுத்து, கவிஞர் அப்துல் ரஹ்மானால் எழுதப்பட்டது
அ. அவரின் ஏனைய கவிதை நூல்கள் இரண்டு தருக ?
ஆ. "பத்தி எழுத்து" என்றால் என்ன ?

(4*x*5=20 புள்ளிகள்)

02. கீழ்க்காணும் பாடற்பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக?

தங்க வளைக்கைகள் தொட்டுச் சமைத்தது
சாலக்கமழு தையா - இதில்
அங்கமெலாம் மிகப் பொங்கி வழிந்திடும்
அன்புங் கலந்த தையா

கொட்டிய உப்புக் கசப்பதென்றாலுமுள்
கூடியினிக்கு தையா - இது
விட்டுப் பிரிகையிற் சொட்டுக் கண்ணீர்பட்ட
விண்ணில் அமுதமையா

சொன்னபடி நட வாத துடிப்பயல்
தொட்டுச் சுவைத்ததையா - அது
சின்னஞ் சிறுகைக் குழந்தை யளைந்தது
தெய்வ அமுதமையா

ஆகக் கரிந்து பொரிந்த தென்றாலுமே
அன்பு மணக்கு தையா - இது
வேகவைக் காததென் றாலும் எனக்கொரு
விந்தை உருசி யையா

ஊது குழறு சத்தம் கேட்டவ திப்பட்டு
ஓடி வருகை யிலே - இது
பாதி வழி வந்த தாமரைக் கைதந்த
பச்சை அமுதமையா

கட்டிய அன்புக் கயிற்றினிற் சுற்றிய
சுட்டுப் பொதியி தையா - இதைத்
தொட்டுச் சுவைக்கையில் உள்ளமெல் லாமொரு
சோதி மிளிரு தையா.

(01) கவிஞரின் மனைவி, குழந்தைகள் பற்றிய சித்திரிப்பு இக்கவிதையில் எடுத்துக் கூறப்படுமாற்றை விளக்குக?

(02) பயணத்திற்காக அவசரத்தில் சமைக்கப்பட்ட உணவு என்பது புலப்படுமாற்றை விளக்குக ?

(03) இப்பாடலில் இடம்பெற்றுள்ள அணிகளை எடுத்துக் காட்டுக ?

(04) இக்கவிதை வெளிப்பாட்டு முறையிலுள்ள சிறப்புக்களைக் கூறுக ?

(05) ஒத்த பொருள் தருக.

(i) அங்கம் (ii) அமுதம் (iii) அளைதல்

(iv) விந்தை (v) சோதி (5*x*5=25 புள்ளிகள்)

பகுதி - II

03. கீழ்க்காணும் உரைப்பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

காளைக் கன்றுக்குட்டிக்குக் கழுத்துச் சங்கிலியோடு வாய்ப்பூட்டான கூடையும் கிடைத்தது. நினைத்த நேரத்தில் பால் குடிக்க முடியவில்லை.

பால் கறக்கும் நேரத்தில் மட்டும் கன்றுக்குட்டியை அவிழ்த்து விடும் மாடசாமி, சரியாகப் பால் சுரக்கும் அதன் வாய்க்கு வரும் நேரத்தில், அதை இழுத்துப் பிடித்துக் கட்டி விட்டு, கறக்க தொடங்கி விடுவான். அவன் கறந்து முடித்து விட்டு, அவிழ்த்து விடும் போதே மடியில் ஒரு சொட்டுப் பால் கூட மீதமிருக்காது.

கன்றுக் குட்டி முட்டிப் பார்க்கும், மோதிப் பார்க்கும். கதறிப்பார்க்கும், இந்தத் துடிப்பை காணும் அடுத்த வீட்டுக் காளையோ தன் அடித் தொண்டையிலிருந்து குரல் எழுப்பும். குறுக்கே நிற்கும். சுவரில் கொம்புகளை அது மோதுவதும் உண்டு.

தாய்ப் பசுவுக்கோ இந்த வேதனைகளைத் தாங்கவே முடியவில்லை. அதனால் என்ன செய்ய முடியும்? கன்றுக் குட்டியின் கன்னங்கரிய பெருவிழிகள் இரண்டும் ஒளி இழந்து வந்தன. அதனால், துள்ளவும் முடியவில்லை. குதிக்கவும் முடியவில்லை. தள தள வென்று சதைப் பிடிப்போடு இருக்க வேண்டிய மேனியில் எழும்பும் கூட புறப்படத் தொடங்கியது.

கன்று தாயை ஏக்கத்தோடு பார்க்கும். தாய் ஏக்கத்தோடு கன்றைப் பார்க்கும். இரண்டையும் சேர்த்துப் பார்க்கும் அடுத்த வீட்டுக் காளையோ, மூச்சு விடுவதற்குப் பதிலாக நெருப்புக் கனலைக் கக்கும்.

(அ) இங்கு கன்றுக்குட்டியின் பரிதாப நிலை காட்டப்படும் விதத்தினை விளக்குக.

(ஆ) கன்றுக் குட்டிக்குப் பால் குடிக்க முடியாமல் போனதற்கு காரணம் யாது ?

(இ) தாய்ப்பசுவின் மனநிலை வெளிப்படுத்தப்படுமாற்றை தருக ?

(ஈ) மாடசாமியின் குணப் பண்புகள் யாது ?

(உ) இவ்வுரைப்பகுதியில் ஆசிரியரின் மொழி நடை சிறப்பு பற்றி கருத்துரைக்க ?

(5 *x* 5 =25 புள்ளிகள்)

பகுதி - III

- எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.

04. கானல் வரிப்பாடல்கள் மூலம்

(i). சோழ வள நாட்டின் சிறப்புக்களை விளக்குக ?

(ii). சோழ மன்னனின் சிறப்புக்களை எடுத்து விளக்குக ? (8 +7 =15 புள்ளிகள்)

05. "தெளிவு" என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு

(i). பாரூக் நானாவின் ஏழ்மை நிலை

(ii). மைமூன் கிழவியின் வறுமை நிலை எடுத்துக் காட்டப்படும் விதத்தினை விளக்குக ?

(8 +7 =15 புள்ளிகள்)

06. காலம் தோறும் அகம் என்ற பாடப்பரப்பை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?

(i). ஒவ்வொரு காலகட்டத்திலும் எழுந்த காதல் பற்றிக் கூறப்படும் இலக்கியங்களைக் கூறுக?

(ii). காலம் தோறும் எழுந்த இலக்கியங்களில் காதல் உணர்வு வெளிப்படுத்தப்படுமாற்றினை கூறுக.?

(8 +7 =15 புள்ளிகள்)

07. கிட்கிந்தைப் படலத்தில்

(i). இராமன் இலக்குமணனிடம் சுக்ரீவன் குறித்து ஆவேசப்பட்டு முறையிடுபவை பற்றி விளக்குக ?

(ii). இலக்குமணனின் சிறப்புக்களாக கூறப்படுபவை யாவை ?

(8 +7 =15 புள்ளிகள்)

* * *

முதலாம் தவணைப் பரீட்சை - 2018
தமிழ் மொழியும் இலக்கியமும்
தரம் 11 - விடைகள்
பகுதி I

01. (i). (அ). உவமை அணி
(ஆ). உவமானம் : வாள்
உவமேயம் : விழி
உவமை உருபு : போன்ற
பொதுத் தன்மை : அழகு

(ii). (அ). அன்ன + காலையின் + ஆண் + தகை + ஆளியும்
பொன்னின் + நல் + நகர் + வீதியில் + புக்கனன்
(ஆ). இலக்குவணனின் வீரம், அழகு ஆண்மை என்பன உவமையணியின் மூலம் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

(iii). (அ). பாரதிதாசன் ஆவார்.
(ஆ). சையோகம் என்பதன் பொருள் ஒன்றித்தல் என்பதாகும்.

(iv). (அ). தாய்ப்பசுவால் - காளை மாட்டுக்கு
(ஆ). அகிலன் ஆவார்.

(v). (அ). பால்வீதி, சுட்டுவிரல்

(ஆ). ஏதேனும் ஒரு விடயம் பற்றி பத்திரிகைகள் சஞ்சிகைகளில் எடுதப்படுகின்ற கருத்துக்கள். அதாவது பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கிய காலத்தில் கட்டுரை மரபுகளை மீறிய வகையில் உருவாக்கப்பட்ட ஒரு ஆக்க வடிவம் இது தமிழுக்கு கிடைத்த புதியதொரு வடிவமாகும். (4*x*5=20 புள்ளிகள்)

02. (01). மனைவி : தங்க வளையல்கள் அணிந்த கைகளையுடையவள். தாமரை போன்ற கைகளையுடையவள். கணவன் மீது அளவற்ற அன்புடையவள் கணவனின் பிரிவைத் தாங்க முடியாதவள்.
குழந்தைகள் : உணவைத் தொட்டுச் சுவைக்கும் சொன்னபடி நடவாத ஒரு துடிப்பயல் உணவை அளையும் சின்னஞ் சிறு கைக்குழந்தை.
(02). உப்புக்கசத்தல், ஆகக் கரிந்து போயிருத்தல், வேகவைக்காதிருத்தல்.
(03). தாமரைக் கைகள் - உவமை அணி
அன்புக் கயிறு - உருவக அணி

04. எளிமையான சொல்லாட்சி, கிராமிய இசை வடிவம் சார்ந்த ஓசைப்பாங்கான பாடலமைப்பு, அணிப்பயன்பாடு, சிறப்பான உணர்ச்சி வெளிப்பாட்டுத்தன்மை

05. (i). அங்கம் - உடலுறுப்பு
(ii). அமுதம் - இனிமையான உணவு
(iii). அளைதல் - பிசைதல்
(iv). விந்தை - புதுமை
(v). சோதி - ஒளி (4*x*5=20 புள்ளிகள்)

பகுதி II

03. (அ). பால் குடிக்க முடியாமல் வாய்ப்பூட்டுக் கூடை இட்டிருத்தல், நினைத்த நேரத்தில் பால் குடிக்க முடியாமை, பசுவின் மடியை முட்டிப்பார்க்கும், மோதிப் பார்க்கும், கன்று தாயை ஏக்கத்தோடு பார்த்தல், கண்கள் ஒளியிழந்து காணப்பட்டமை.
(ஆ). கழுத்தில் சங்கிலியும், வாய்ப்பூட்டான கூடையும் இடப்பட்டமை.
(இ). கன்றின் நிலை கண்ட பசுவுக்கு வேதனை தாங்க முடியவில்லை.
“தாய், கன்றை ஏக்கத்தோடு பார்த்தல்.

(ஈ). ◗ ஜீவகாருண்யம் அற்றவன் ◗ நன்றி மறந்தவன்
◗ தந்திர உபாயம், ஏமாற்று வேலைகளில் ஈடுபடுகின்றவன்
◗ பொய் சொல்பவன் ◗ ஏமாற்றுக்காரன்

(உ). ◗ சிறு சிறு வாக்கியங்கள் ◗ ஆர்வத்தை தூண்டும் நடை
◗ பேச்சுத் தமிழ்ப் பயன்பாடு ◗ உணர்ச்சிச் செறிவான வாக்கிய அமைப்பு

(5 *x* 5 = 25 புள்ளிகள்)

பகுதி III

04. i. • காவேரியின் புது வெள்ளம் பொங்கி வர வளம் நிறைந்த நாடு பூக்கள் மலர்ந்த சோலையில் மயில்கள் மகிழ்ந்து ஆட, அதைக் கண்ட குயில்கள் இசை பாடும் நாடு.
• இரு புறமும் வண்டுகள் மிக்கொலிக்க அழகிய பூக்களை ஆடையாக அணிந்த நாடு.
• காவேரி, கங்கை, குமரி ஆகிய ஆறுகளால் வளம் பெற்ற நாடு.

ii. • மாலையை அணிந்தவன், முழு மதியைப் போன்ற வெண்கொற்றக்குடையை உடையவன்.
• சோழ மன்னன் சென்னிட, செங்கோல் செலுத்தி படை நடத்திச் சென்று கங்கையை வெற்றி கொண்டவன்.
• நிறைந்த புகழ்மாலை சூடியவன். வெண்கொற்றக் குடையை உடையவன்.
• என்றும் வளையாத செங்கோல் செலுத்தி படை நடத்திச் சென்று குமரியை வென்றவன்.
• காவேரி, கங்கை, குமரி ஆகிய ஆறுகளால் நீர் வளம் பெற்ற நாட்டை உடையவன்.
• போரொழுக்கமிக்க வீரர்களின் வெற்றி முழக்கம் ஒலிக்க அரசு செய்கின்ற சோழ மன்னன் செங்கோல் வளையாமல் நீதியின் பால் நிலைத்திருக்கின்ற ஆட்சிச் சிறப்பை உடையவன்.
• சூரிய மரபில் தோன்றியவன்.
• உயிர்களைக் காக்கும் அருள் நிறைந்த ஆணைச்சக்கரத்தை உடையவன்.

(8 + 7 = 15 புள்ளிகள்)

05. i). • உச்சி வெய்யில் உடலை வெப்பமேற்றி முதகை நனைக்கிறது.
• மேடு, பள்ளம் என்று சைக்கிள் மிதித்ததில் கால் விரல்களில் ஊமைவலி.
• கையில் கடிதக் கட்டுக்களுடன் வியர்வை நெடியோடு ஊரை வலம் வருகிறேன்.
• எதிலுமே பிடிப்பற்ற ஒரு மலட்டுச் சோகம் எனக்குள்
• இல்லத்தில் அடிக்கடி இப்படி முகமுறிவுகள் ஏற்படுவதுண்டு. எல்லாம் பொருளாதாரத் துண்டு விழாமல் ஏற்படும் நிர்ப்பந்தங்கள்.
• கலியாண வூட்டுக்குப் போறதெண்டா ஆயிரம் ரூபாவுக்கு மேல வேணும். இப்ப வசதியில்ல. கடன் கேட்க யாருமில்லை. பொறகு பார்க்கலாம். (பாத்திமாவுக்கு கூறியது)
• கடிதத்தைப் பிரித்து அதனுள் இருக்கும் நூறு ரூபாவை எடுக்க முனையும் நிலை.
• பிறரது ஏழ்மை நிலையைக் கூட உணர முடியாத அளவுக்கு பாரூக்கின் ஏழ்மை அவனது உள்ளத்தைத் தவறு செய்யத் தூண்டுகிறது.

ii). • ஏண்ட மகள் சரீனா சவூதி பெயித்து மூணு மாசமாவுது மகன், சல்லியுமில்லை, காயிதமுமில்லை, பச்சப்புள்ள மூண்ட, ஏண்ட தலேல, பாரம் சாட்டிட்டு பெய்திட்டா! இவ்வளவு நாளும் சமது கடையில அவள் அனுப்பினா தார என்டு சாமான் கடனுக்கு வேங்கின. இப்ப அவன் தார இல்ல மகன். நேத்து ராவையில இருந்து எல்லாம் பட்டினி. நான் என்னத்த செய்ய? இந்தக் கண் தெரியாத கெழவியை அல்லா சோதிக்கிறான்.
• ஏண்ட பேரனுங்க, நெருப்பு மாதிரிக் காயுது! டொக்டர் கிட்ட போவ எண்டாலும் எனக் கிட்ட ஐஞ்சி சதமாலும் இல்ல. யா அல்லாஹ் நான் என்னத்தச் செய்ய மகன். கல்பு (மனம்) கேட்குது இல்லை. அழுகையும், ஆத்திரமும் தொண்டையை அடைக்கிறது அவளுக்கு.

(8 + 7 = 15 புள்ளிகள்)

06. i). • கார்கால எல்லையாகிய நான்கு மாதங்கள் கழிந்தாலும் காலம் தாழ்த்திக் கொண்டிருக்கின்றானே மன்னனான சுக்ரீவன்.
• அரிய அரச செல்வத்தையும், இழந்த மனைவியையும் நம் உதவியால் பெற்ற பெரிய தகுதியை நினைவிற் கொள்ளாமல் மறந்து விட்டான்.
• நல்லொழுக்கத்திலிருந்து தவறிவிட்டான்.
• நமது பெறுவதற்கு அரிய நட்புக் கரத்தை அறுத்த வாய்மையும் குலைந்து விட்டான்.

ii). • வலிமையானவன்.
- சிந்தித்து முடிவெடுப்பவன்.
- ஆண்களில் சிறந்தவன்
- சிங்கம் போன்றவன்
- கழுத்திலிடும் கயிறுடைய யானையைப் போன்றவன்.
- இராம பிரானை விட்டு எப்போதும் நீங்காதவன்.
- கருணை மிக்கவன்.

(8 + 7 = 15 புள்ளிகள்)

07. i). • சங்ககாலம் - குறுந்தொகை
- சங்க மருவிய காலம் - கார்நாற்பது
- பல்லவர் காலம் - நாச்சியார் திருமொழி
- சோழர் காலம் - நளவெண்பா
- நாயக்கர் காலம் - தனிப்பாடல்கள்

ii). • சங்ககாலம் - ஆண்மகன் தனது காதல் ஏக்கத்தை நெஞ்சோடு சொல்லி புலம்புவதாக அமைந்துள்ளது. (பிறர் அறியா வண்ணம்)
- சங்கமருவிய காலம் - ஆண்மகன் தனது காதல் ஏக்கத்தை தேர்ப்பாகனுக்கு சொல்லுகின்றான். (பிறர் அறிதல்)
- பல்லவர் காலம் - பெண்மகள் தனது காதல் உணர்வுகளை தோழியிடம் வெளிப்படுத்துகிறாள். அகத்திணை மரபு உடைக்கப்படுகிறது.
- சோழர்காலம் - பெண்மகள் நாணம் இழந்து தனது காதல் உணர்வுகளை வெளிப் படுத்துகின்றாள். தலைவன் தலைவியின் பெயர் சுட்டாது பாடுவது சங்ககால அகத்திணை மரபு இதில் தலைவியின் பெயர் சுட்டப்படுகிறது. (தமயந்தி அகத்திணை மரபு உடைக்கப்படுகிறது)
- நாயக்கர் காலம் - பெண்மகள் நாணம் இழந்து தனது காதல் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றாள்.
காதல் காமமாக வெளிப்படுகிறது. காதல் கட்டுடைப்பு ஏற்படுகின்றது.

(8 + 7 = 15 புள்ளிகள்)

* * *

LOL.lk
BookStore

විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න



| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර | A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් | School Book | ගුරු අත්පොත්

pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න